பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
01 12 2024 **SUNDAY** 6 30 **PM**

வணக்கம் - மாநில செய்திகள்
தலைப்புச் செய்திகள்

1. புதிய இந்தியாவை கட்டமைப்பதற்கு மாணவர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம். பிர்லா கேட்டுக் கொண்டுள்ளார்.
2. மழைக்காலங்களில் நோய் தொற்று பரவாமல் தடுப்பதற்கான மருந்துகளை கையிருப்பில் வைத்துக் கொள்ளுமாறு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.
3. தமிழக சட்டப்பேரவைக்கு வரும் 2026ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தேர்தல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. அண்ணாமலை தெரிவித்துள்ளார்.
4. தமிழகத்தில் விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணி நேரத்தில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
5. சையத் மோடி சர்வதேச பேட்மிட்டன் போட்டியில் இந்தியாவின் பி.வி. சிந்து பட்டம் வென்றார்.

>>>>><<<<<

புதிய இந்தியாவை கட்டமைப்பதற்கு மாணவர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம். பிர்லா கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னை, பல்லாவரத்தில் உள்ள தனியார் கல்லூரியில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், தொன்மையான கலாச்சாரம், பாரம்பரியம், அறிவியல் தொழில்நுட்பம் ஆகியவற்றில் தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்வதாக கூறினார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சிப் பணிகளை ஊக்குவிப்பதற்கான சிறப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

சர்வதேச நிறுவனங்களின் தலைமை பொறுப்பில் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் சிறப்பாக செயல்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

மாணவர்கள் அனைத்து துறைகளிலும் சிறந்து விளங்குவதாக அவர் கூறினார்.

இளங்கலை, முதுகலை மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளை முடித்த மாணவ மாணவிகளுக்கு திரு. ஓம் பிர்லா பட்டங்களை வழங்கினார்.

>>>>><<<<<

மழைக்காலங்களில் ஏற்படும் நோய்களுக்கான மருந்துகளை போதிய கையிருப்பில் வைத்துக் கொள்ளுமாறும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சைகளை வழங்குமாறும் முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

கனமழை எச்சரிக்கையை அடுத்து, காணொலி மூலம் ஆலோசனை மேற்கொண்ட அவர், திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, ராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து கேட்டறிந்தார்.

சென்னையில் மழை நீர் தேங்கியுள்ள பகுதிகளில் அதனை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

>>>>><<<<<

கள்ளக்குறிச்சி, விழுப்புரம், செங்கல்பட்டு உள்ளிட்ட அதிகனமழையால் பாதிக்கப்பட்டுள்ள ஏழு மாவட்டங்களில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருவதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னை, மடுவன்கரையில் சிறப்பு மருத்துவ முகாமை தொடங்கி வைத்துப் பேசிய அவர், சென்னையில் 200 இடங்களில் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருவதாக கூறினார்.

வடகிழக்கு பருவமழை தொடங்கிய நாளிலிருந்து மாநிலம் முழுவதும் 51 ஆயிரத்து 707 மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த முகாம்கள் மூலம் 28 லட்சத்திற்கும் அதிகமானோர் பயனடைந்துள்ளதாக அமைச்சர் கூறினார்.

>>>>><<<<<

வடகிழக்கு பருவமழை மற்றும் ஃபெஞ்சல் புயலால் டெல்டா மாவட்டங்கள் உட்பட பாதிக்கப்பட்ட பகுதிகளில் உரிய நிவாரண உதவிகளை வழங்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு. எடப்பாடி பழனிசாமி மாநில அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், டெல்டா மாவட்டங்களில் சுமார் 12 லட்சம் ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த பயிர்கள் பாதிப்படைந்துள்ளதாகவும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் உரிய கணக்கெடுப்பு நடத்தி நிவாரண உதவிகளை வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும், கடந்த மூன்றாண்டுகளாக மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 34 ஆயிரம் நிவாரண உதவி வழங்குமாறு தாம் ஏற்கனவே கோரிக்கை விடுத்திருந்ததை திரு. எடப்பாடி பழனிசாமி சுட்டிக்காட்டியுள்ளார்.

>>>>><<<<<

தமிழக சட்டப்பேரவைக்கு வரும் 2026ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தேர்தல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், லண்டனில் மூன்று மாத கால அரசியல் புத்தாக்க பயிற்சியை மேற்கொள்ள கட்சி அனுமதி வழங்கியதற்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

பிஜேபி-யின் நிர்வாகிகளை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் விரைவில் நடைபெறவுள்ளதாக அவர் கூறினார்.

இந்தியா மீது, மேற்கத்திய நாடுகள் மிகுந்த நன்மதிப்பை வைத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

அரசியலில் வெற்றி தோல்விகளை கடந்து, தொடர்ந்து மக்கள் பணியாற்ற வேண்டும் என்று திரு. அண்ணாமலை கூறினார்.

>>>>><<<<<

தமிழகத்தில் விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணி நேரத்தில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரை 54 செகண்ட்ஸ்)

ஃபெஞ்சல் புயல் காரணமாக விழுப்புரம் மாவட்டத்தின் பெரும்பாலான இடங்களில் மழைநீர் தேங்கியுள்ளதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் — சுரேஷ் 50 செகண்ட்ஸ்)

திருவண்ணாமலை மாவட்டத்தில் நேற்று முதல் இன்று நண்பகல் வரை தொடர் கனமழை காரணமாக, மாவட்டத்தில் உள்ள அணைகள் முழு கொள்ளளவை எட்டவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - ரவிச்சந்திரன் 52 செகண்ட்ஸ்)

ஃபெஞ்சல் புயல் மற்றும் தொடர்மழை காரணமாக, திருவள்ளூர் மாவட்டத்தில், பயிர்கள் சேதமடைந்துள்ளதாக விவசாயி ஒருவர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - விவசாயி 35 செகண்ட்ஸ்)

இதனிடையே, நேற்றிரவு புதுச்சேரி அருகே கரையைக் கடந்த ஃபெஞ்சல் புயல், மேற்கு நோக்கி மெதுவாக நகர்ந்து வருவதாகவும், இது படிப்படியாக காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவிழக்கும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

வங்கக்கடல், மன்னார்வளைகுடா பகுதிகளில் மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கனமழை காரணமாக விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கும், வேலூர் மாவட்டத்தில் பள்ளிகளுக்கும் நாளை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

ஃபெஞ்சல் புயல் காரணமாக பெரம்பலூர் மாவட்டத்தில் 500 ஏக்கரில் பயிரிடப்பட்ட மக்காச்சோளப் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

>>>>><<<<<

கள்ளக்குறிச்சி மாவட்டம், கல்வராயன்மலை அடிவாரத்தில் உள்ள கோமுகி அணையிலிருந்து 3 ஆயிரத்து 400 கனஅடி நீர் வெளியேற்றப்படுவதால், கரையோரம் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள ஆண்டியப்பனூர் அணை முழுக் கொள்ளளவை எட்டியுள்ளதை அடுத்து, உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருவதால், கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு ஆட்சியர் திரு. தர்பகராஜ் அறிவுறுத்தியுள்ளார்.

>>>>><<<<<

வேலூர் அருகேயுள்ள உத்திர காவிரியாற்றில் கனமழை காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால், பொதுமக்கள் அப்பகுதிக்கு செல்ல வேண்டாம் என்று ஆட்சியர் திருமதி. சுப்புலெட்சுமி கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

சையத் மோடி சர்வதேச பேட்மிட்டன் போட்டியில் இந்தியாவின் பி.வி. சிந்து பட்டம் வென்றார்.

லக்னோவில் இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 21-14, 21-16 என்ற செட்கணக்கில் சீனாவின் **Wu Luo Yu-**யை வென்றார்.

மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் திரேஸா ஜாலி - காயத்ரி கோபிசந்த் இணை பட்டம் வென்றது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் லக்ஷயா சென் பட்டம் வென்றார்.

>>>>>END<<<<<